தினமலர்

சென்னை CHENNAI ■ வியாழன் செப்டம்பர் 28 2023

# ஐ.ஐ.டி., கூடைப்பந்து போட்டி செயின்ட் ஜோசப் 'சாம்பியன்'

சென்னை, செப். 28–
கிண்டியில் உள்ள ஐ.ஐ.டி., மெட்ராஸ் சார்பில் நடந்துவந்த விளையாட்டு திருவிழா, நேற்று முன் தினம் நிறைவடைந்தது.

இதில், 14 வகையான விளையாட்டு போட்டிகளில், 50க்கும் மேற்பட்ட கல்லூரி அணிகள் பங்கேற்றன. கூடைப்பந்து போட்டியில், கடைசி 'சூப்பர் லீக்' சுற்றில், வி.ஐ.டி., அணியை, 75 – 68 என்ற கணக்கில், செயின்ட் ஜோசப் அணி வென்றது.

அனைத்து போட்டிகளின் முடிவில், புள்ளிகள் அடிப்படையில், ஆண்களில் செயின்ட் ஜோசப் முதலிடத்தையும், ஆர்.கே.எம்., விவேகானந்தா இரண்டாமிடத்தையும், ஐ.ஐ.டி., மெட்ராஸ் மற்றும் வி.ஐ.டி., அணிகள் மூன்று மற்றும் நான்காம் இடங்களையும் வென்றன.



■ ஐ.ஐ.டி., மெட்ராஸில் நடந்த ஆடவருக்கான கூடைப்பந்து போட்டியில், முதலிடம் பிடித்த செயின்ட் ஜோசப் அணியினர். இடம்: கிண்டி.

பெண்களில் எத்திராஜ், செயின்ட் ஜோசப், ஐ.ஐ.டி., மெட்ராஸ், ஸ்டேல்லா மேரிஸ் அணிகள், முதல் நான்கு இடங்களை பிடித்தன.

ஆடவருக்கான வாலிபாலில், டி.பி., ஜெயின் முதலிடத்தையும், குருநானக், நாசரத், ஐ.ஐ.டி., மெட்ராஸ் அடுத்தடுத்த இடங்களையும் கைப்பற்றின.

பெண்களில் நாசரத், ராணிமேரி, ஐ.ஐ.டி., மெட்ராஸ், செல்லம்மாள் ஆகிய அணிகள் முறையே, முதல் நான்கு இடங்களை வென்றன.

all PSG 290923